# போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

## I-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

## SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE,

APRIL 4, 1922.

நெ. 14.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் ஞு ஏப்ரல் மீ 4உ. [விலை, 6 பை.

## கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ்மொழிபெயர்ப்பு.

## Tamil Translations of Notifications by Government.

### ஜுடிஷல் டிபார்ட்மெண்ட்.

### விளம்பரங்கள்.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1922-ம் ஞு மார்ச் மீ 25உ.

ஐ. 80.—1921-ம் ஞு ஸெப்டெம்பர் மீ 20உயுள்ள போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட் I-வது பாகத்தின் 941-வது பக்கத்திலே (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் 1921-ம் ஞு ஸெப்டெம்பர் மீ 19உயுள்ள ஜுடிஷல் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த 126-ம் ஐ. விளம்பரம் இதனால் ரத்து செய்யப்படுகிறது.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1922-ம் ஞு பெப்ரவரி மீ 10உ.

ஐ. 81.—1888-ம் ஞுத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்துப் பொலீஸ் ஆக்ட் 78-வது பிரிவினால் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள சிறப்புற்றோங்கும் கவர்னரவர்கள் - அடியிற்கண்ட சகாயச்சட்டத்தைக் களிகூர்ந்து செய்வதுமல்லாமல், போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்டில் அது இங்கிலிஷிலே பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதம் கழிவதன்மேல் அது செலாவணியாகத் தொடங்கவேண்டுமென்று கட்டளையும் இடுகிறார்கள் :—

"யாதொரு தெருவிலாவது பொதுவான இடத்திலாவது பைஸிகிளின் மேல் சவாரிசெய்யும் எந்த நபரும் அதே பைஸிகிளின்மேல் வேறே யாதொரு நபரைக் கைபிடிச் சட்டத்தின்மேலாகிலும் பின்னையிருக்கும் படியின்மேலாகிலும் குறுக்குச்சட்டத்தின் மேலாகிலும் ஏற்றிக்கொண்டுபோகவொட்டக்கூடாது ; மேலும், சேணத்தின்மேல் உட்கார்ந்தன்றி மற்றப்படி எவ்விதமாகவும் எந்த நபரும் யாதொரு தெருவிலாயினும் பொதுவான இடத்திலாயினும் பைஸிகிளின்மேல் சவாரிசெய்யக்கூடாது."

ஆர். ஏ. க்ராஹம்,
ஆக்டிங் சீவ் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.